மாகாணக்கல்வித் திணைக்களம்

வடக்கு மாகாணம்

நிலையறி பரீட்சை – 2021

தரம் 8 கத்தோலிக்க திருமறை நேரம் -2 மணித்தியாலங்கள்

1.தூய லூக்கா நற்செய்தியின் அடையாளம்
1)கழுகு 2)எருது 3)மனிதன் 4)சிங்கம்

2.தூய லூக்கா நற்செய்தி எழுதப்பட்ட காலப்பகுதி
1)கி.பி.80 – 90 2) கி.பி.85 – 90 3) கி.பி.80 – 85 4) கி.மு.80 – 85

3.தூய லூக்கா நற்செய்தியின் வேறு பெயர் அல்லாதது
1)செபத்தின் நற்செய்தி 2)இரக்கத்தின் நற்செய்தி
3)பெண்களின் நற்செய்தி 4)இறையாட்சியின் நற்செய்தி

4.மனந்தளராமல் இடைவிடாமல் இறைவனிடம் மன்றாட இயேசு கூறிய உவமை
1)நேர்மையற்ற நடுவனும் கைம்பெண் 2)பரிசேயனும் ஆயக்காரனும்
3)நல்ல சமாரியன் 4)திருமணவிருந்து

5.மீட்பின் வரலாற்றை ஆயத்தம் செய்ய இறைவன் அழைத்த முதல் நபர் யார்?
1)ஆதாம் 2) ஆபிரகாம் 3)ஈசாக் 4)மோசே

6.தியோபில் என்ற பெயரின் அர்த்தம்
1)அபிசேகம் செய்யப்பட்வர் 2)மீட்பர் 3)இறைவனின் நண்பன் 4)இறைவனின் மூச்சு

7.இயேசு என்னும் மெசியா, சமாதானத்தின் இறைவன் பெத்லகேமில் பிறப்பார் என முன்னறிவித்த இறைவாக்கினர்
1)மீக்கா 2)சாமுவேல் 3)எசாயா 4)செக்கரியா

8.இயேசுக்கிறிஸ்துவின் முன்மாதிரியாய் இருந்து அவரது வருகைக்காக மக்கை ஆயத்தம் செய்வதையே பணியாகக் கொண்டவர்
1)திருத்தூதர் யோவான் 2)திருமுழுக்கு யோவான் 3)யோவான் மாற்கு 4)பேதுரு

9.உங்களுக்குக் குறிக்கப்பட்ட தொகைக்கு அதிகமாக எதையும் தண்டாதீர்கள் என அறிவுரை கூறப்பட்டது
1)வரிதண்டுபவர்களுக்கு 2)படைவீரர்களுக்கு
3)மக்கள் கூட்டத்திற்கு 4)மறை நூல் அறிஞர்களுக்கு

10.இயேசு திருமுழுக்குப் பெற்று யோர்தான் ஆற்றை விட்டுத்திரும்புகையில் யாரால் பாலைநிலத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்
1)அலகையால் 2)தூயஆவியால் 3)இறைதந்தையால் 4)திருமுழுக்கு யோவான்

kalvi.lk

11.இயேசு இறையாட்சி விழுமியங்களை எவ்வாறு கற்பித்தார்
1)உவமைகள் மூலம் 2)போதனை மூலம்
3)அறிவுரை மூலம் 4)செயற்பாட்டின் மூலம்

12.இயற்கையுடன் தொடர்புடைய வகைப் புதுமைக்குள் அடங்காதது
1)புயலை அடக்குதல் 2)ஐயாயிரம் பேருக்கு உணவளித்தல்
3)கடல் மீது நடத்தல் 4)இலாசரை உயிர்பித்தல்

13.கத்தோலிக்க திருவழிபாட்டின் மையமாக அமைவது எது?
1)திருவழிபாடு 2)புனிதர் வணக்கம் 3)திருப்பலி 4)திருப்புகழ்மாலை

14.நற்கருணையின் சிறப்பியல்புகளில் ஒன்றாக அமையாதது
1)அருளடையாளம் 2)உடன்படிக்கை 3)பலி 4)மெல்கிசதேக்கின் பலி

15.முதிர்ச்சி பெற்ற கிறிஸ்தவனாக முழுமை பெற தூயஆவி எம்மில் செயலாற்றும் விசேட அருளடையாளம்
1)திருமுழுக்கு 2)உறுதிபூசுதல் 3)ஒப்புரவு 4)நற்கருணை

16.நல்லவற்றைக் கடைப்பிடிக்க தீயவற்றை முற்றாக விலக்க வழங்கப்படும் திருக்கொடை
1)ஞானம் 2)புத்தி 3)அறிவு 4)விமரிசை

17.தூயஆவியின் கனிகளில் அடங்காதது
1)பரமஅன்பு 2)நன்னயம் 3)நிறைகற்பு 4)விமரிசை

18.உறுதிபூசுதல் பெறுபவருக்கு இருக்கவேண்டிய தகுதிகளில் ஒன்று
1)14 வயதைப் பூர்த்தி செய்திருத்தல் 2)16 வயதைப் பூர்த்தி செய்திருத்தல்
3)ஆன்மாவில் அழியாத முத்திரை பதிக்கப்படுகிறது 4)திருச்சபையுடன் முழு உறவுகொள்ளல்

19.உலகம் முழுவதையும் ஆட்சி செய்யும் செயற்பாடுடையவர்
1)தந்தையின் செயற்பாடு 2)மகனின் செயற்பாடு
3)தூயுஆவியின் செயற்பாடு 4)ஆண்டவரின் தூதர்களின் செயற்பாடு

20.தூய திரித்துவத்தின மறைபொருளை புரிந்துகொள்ள முயற்சித்து அதிசய சிறுவனின் மூலம் தெளிவுபெற்றவர்
1)தூய அம்புறோஸ் 2)தூய பசில் 3)தூய அகுஸ்தீனார் 4)தூய ஜெறோம்

(2*20=40 புள்ளிகள்)

## பகுதி - 2

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக**

1)நற்செய்தியாளர் தூய லூக்காவால் எழுதப்பட்ட நூல்கள் 2 எழுதுக?
2)தூய லூக்காநற்செய்திக்கு வழங்கப்பட்ட வேறுபெயர்கள் 2 எழுதுக?
3)இயேசு இறைமகன் என இறைவனால் வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் 2 எழுதுக?
4)இயேசு செய்த புதுமைகளின் வகைகளில் 2 எழுதுக?
5)புயலை அடக்கிய புதுமையினால் நமக்குக் கிடைக்கும் செய்தி 2 எழுதுக?
6)உமது வாழ்வில் புதுமைகளை அனுபவிக்க வேண்டுமாயின் நீர் செய்யவேண்டியவை 2 எழுதுக?
7)தேவ நற்கருணைக்கு முன்னடையாளஙள் 2 எழுதுக?
8)நற்கருணையின் சிறப்பியல்புகள் 2 எழுதுக?
9)தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்ட திருத்தூதர்களிடம் ஏற்பட்ட மாற்றங்கள் 2 எழுதுக?
10)உறுதிபூசுதல் பெற்றவரின் கடமைகள் 2 எழுதுக?

(2*10=20 புள்ளிகள்)

2.அ)தூய லூக்கா நற்செய்தி எழுதப்பட்டதன் நோக்கம் யாது?
ஆ)லூக்கா நற்செய்தி செபத்தின் நற்செய்தி என அறிமுகப்படுத்துவதற்கான மூன்று காரணங்கள் தருக?
இ)தூய லூக்கா நற்செய்தியினூடாக நீர் பெறும் படிப்பினைகள் 5 எழுதுக?

(2*3*5=10 புள்ளிகள்)

3.அ)மெசியா பற்றி முன்னறிவித்த இறைவாக்கினர்கள் இருவரை எழுதுக?
ஆ)இயேசுவைக் குறித்து மரியாவுக்கு கபிரியேல் தூதர் கூறிய விடயங்கள் 3 எழுதுக?
இ)இயேசுவின் பிறப்பு சம்பவத்தின் மூலம் உமக்குக் கிடைக்கும் படிப்பினைகள் 5 எழுதுக?

(2*3*5=10 புள்ளிகள்)

4.அ)இறையாட்சி என்பதற்கான வரைவிலக்கணம் 2 எழுதுக?
ஆ)இறையாட்சி பற்றிக் கூறப்படும் உவமைகள் 3 எழுதுக?
இ)இறையாட்சிப் பண்புகளை உம்மில் வளர்த்துக் கொள்ள உம்மால் செய்யக்கூடிய செயல்கள் 5 எழுதுக?

(2*3*5=10 புள்ளிகள்)

5.அ)உறுதிபூசுதல் அருளடையாளத்தைப் பெறுவதற்கு தேவையான தகுதிகள் 2 எழுதுக?
ஆ)தூயஆவியின் கொடைகளில் இரண்டினை குறிப்பட்டு அவற்றில் ஒன்றை விளக்குக?
இ)தூய ஆவியின் வரம் வேண்டிச் செபம் ஒன்று எழுதுக?

(2*3*5=10 புள்ளிகள்)

Education கல்வி அதியாபன

# GRADE 6,7,8

## STUDY WITH US..!

# SCIENCE

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் கணித பாட வகுப்புகள்.

- ✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
- ✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
- ✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

| TAMIL MEDIUM | ENGLISH MEDIUM |
|---|---|
| 850/= Monthly | 1000/= Monthly |

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**



கல்வி

Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page